T.C. 153

009/DM/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR LOCAL FUND AUDIT AND INTERNAL AUDIT DEPARTMENTS

(Without Books)

Maximum Time : 1.30 hours Maximum Marks : 60

***IMPORTANT INSTRUCTIONS***

**OBJECTIVE TYPE**

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 60 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 60 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Tamilnadu Panchayat Union Pensioners Family Security Fund Rules - 2014 come into force w.e.f.

(A) 01.04.2014 (B) 20.05.2014
(C) 07.11.2014 (D) 01.11.2014

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதி விதிகள் அமுலுக்கு வந்த நாள்

(A) 01.04.2014 (B) 20.05.2014
(C) 07.11.2014 (D) 01.11.2014

2. The rate of Contribution to the construction workers welfare fund was revised to 1 % from

(A) 17.12.2013 (B) 02.01.2014
(C) 24.12.2013 (D) 01.04.2014

கட்டுமான தொழிலாளர் நலநிதிக்கான பங்குத் தொகை 1% ஆக மாற்றப்பட்ட நாள்

(A) 17.12.2013 (B) 02.01.2014
(C) 24.12.2013 (D) 01.04.2014

3. Lapsed Deposits should not be refunded after

(A) Five years (B) Six years
(C) Three years (D) Two years

காலங்கடந்த வைப்புத் தொகைகள் எத்தனை ஆண்டுகட்கு பின்னர் திரும்ப வழங்கலாகாது

(A) ஐந்து ஆண்டுகள் (B) ஆறு ஆண்டுகள்
(C) மூன்று ஆண்டுகள் (D) இரண்டு ஆண்டுகள்

4. Servants Tax is levied by

(A) Madras Corporation (B) All Municipalities
(C) All Municipalities in the Hilly Regions (D) Panchayat Unions

வேலையாள் மீதான வரி விதிக்கப்படுவது எந்நிறுவனத்தால்

(A) சென்னை மாநகராட்சி (B) அனைத்து நகராட்சிகள்
(C) மலைப்பிரதேச நகராட்சிகள் (D) ஊராட்சி ஒன்றியங்கள்

5. Quionquennial Revision of Tax is related to which Tax?

(A) Vacant Land Tax (B) Education Tax
(C) Property Tax (D) Profession Tax

ஐந்தாண்டுக்கொரு முறையான வரிச் சீராய்வு எந்த வரியோடு தொடர்புடையது

(A) காலியிட வரி (B) கல்வி வரி
(C) சொத்து வரி (D) தொழில் வரி

6. The Annual Income of a Townpanchayat exceeds 200 lakhs is classified as

(A) Grade II (B) Grade I

(C) Selection Grade (D) Special Grade

ரூ. 200 இலட்சத்திற்கு மேல் வருவாயுள்ள பேரூராட்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ள நிலை

(A) நிலை II (B) நிலை I

(C) தேர்வு நிலை (D) சிறப்பு நிலை

7. Education Tax on Property Tax in Municipalities per annum is

(A) 10 % (B) 2 %

(C) 5 % (D) 3 %

நகராட்சிகளில் ஆண்டுக்கு சொத்து வரி மீதான கல்வி வரி

(A) 10 % (B) 2 %

(C) 5 % (D) 3 %

8. Can the unauthorised construction in poramboke land be assessed for Property Tax in a Municipality?

(A) Can be Assessed fully (B) Cannot be Assessed

(C) Can be Assessed at 50% (D) Can be Assessed at 25%

புறம்போக்கு நிலுத்திலுள்ள அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது நகராட்சி சொத்து வரிக்காக வரிவிதிப்பு செய்ய முடியுமா?

(A) முழுமையாக வரி விதிக்கலாம் (B) வரி விதிக்க இயலாது

(C) 50% மட்டுமே விதிக்கலாம் (D) 25% மட்டுமே விதிக்கலாம்

9. Regarding the assessment of property tax the discount for the buildings upto 5 years is

(A) 10 % (B) 15 %

(C) 20 % (D) No Discount

சொத்து வரி விதிப்பை பொறுத்த மட்டில் 5 வயதுடைய கட்டிடங்களுக்கு தள்ளுபடி எவ்வளவு

(A) 10 % (B) 15%

(C) 20 % (D) தள்ளுபடி இல்லை

10. During the assessment of property tax the rate of zonal basic value can be reduced by the

(A) Council (B) Mayor

(C) Commissioner (D) Government

சொத்து வரி விதிப்பின்போது மண்டல அடிப்படை மதிப்பினை யார் குறைக்கலாம்?

(A) மன்றம் (B) மேயர்

(C) ஆணையர் (D) அரசு

11. Levy of property tax on electric poles is

(A) In admissible (B) Admissible

(C) Admissible at 50% (D) Admissible at 25%

மின் கம்பங்களின் மீது சொத்து வரி விதிப்பை

(A) அனுமதிக்கலாகாது (B) அனுமதிக்கலாம்

(C) 50% வரை அனுமதிக்கலாம் (D) 25% வரை அனுமதிக்கலாம்

12. Market Committees are exempted from payment of

(A) Vehicle Tax (B) Water Tax

(C) Vacant Land Tax (D) Profession Tax

மார்க்கெட் கமிட்டி எந்த வரி விதிப்பிலிருந்து விலக்கு பெற்றது?

(A) வாகன வரி (B) தண்ணீர் வரி

(C) காலியிட வரி (D) தொழில் வரி

13. Pilgrim Tax can be levied with sanction of

(A) State Government (B) Central Government

(C) State Government and Central Govt. (D) Council

யாத்திரிகள் வரி யாருடைய அனுமதியின் பேரில் விதிக்கலாம்

(A) மாநில அரசு (B) மத்திய அரசு

(C) மாநில மற்றும் மத்திய அரசு (D) மன்றம்

14. The Taxes and Fees due to the Municipality becomes time barred after the expiry of

(A) 3 Years (B) 6 Years

(C) 8 Years (D) 12 Years

நகராட்சிக்கான வரி மற்றும் கட்டணங்கள் காலாவதியாகும்

(A) 3 ஆண்டுகள் (B) 6 ஆண்டுகள்

(C) 8 ஆண்டுகள் (D) 12 ஆண்டுகள்

15. Register of Germination tests is maintained in

(A) Chennai Corporation
(B) Town Panchayat Office
(C) Agricultural Depots
(D) Panchayat Union Office

முளைப்புத் திறன் சோதனை பதிவேடு பராமரிக்கப்படும் அலுவலகம்

(A) சென்னை மாநகராட்சி
(B) பேரூராட்சி அலுவலகம்
(C) விவசாய துறை
(D) ஊராட்சி ஒன்றிய அலுவலகம்

16. The times of arrears of Stamping Fee for a delay of one year is to be collected at

(A) One Time
(B) Three Times
(C) Four Times
(D) Five Times

ஓராண்டு நிலுவையான முத்திரைக் கட்டண நிலுவைகள் எத்தனை மடங்காக வசூலிக்கப்பட வேண்டும்.

(A) ஒரு மடங்கு
(B) மூன்று மடங்கு
(C) நான்கு மடங்கு
(D) ஐந்து மடங்கு

17. Vessels Berthing Dues Payment Register is maintained in

(A) Boat Club of Chennai
(B) Boat Club of Tuticorin
(C) Assistant Director of Fisheries, Tuticorin
(D) Assistant Director of Khadi and Village Industries

கலங்கள் நிறுத்தும் கட்டண நிலுவை செலுத்தும் பதிவேடு பராமரிக்கப்படும் அலுவலகம்

(A) போட் கிளப், சென்னை
(B) போட் கிளப், தூத்துக்குடி
(C) மீன் வளத்துறை இயக்குநர் அலுவலகம், தூத்துக்குடி
(D) உதவி இயக்குநர் அலுவலகம், (கதர் கிராமத் தொழில்கள்)

18. Physical Verification Superintendent of the agriculture department verifies stock

(A) Once in a Month
(B) Once in a Half Year
(C) Once in a Year
(D) Once in Six months

வேளாண் துறை இருப்பு சரிபார்ப்பு கண்காணிப்பாளர் இருப்பு சரிபார்ப்பு செய்யும் காலம்

(A) மாதம் ஒரு முறை
(B) அரையாண்டுக்கு ஒரு முறை
(C) ஆண்டிற்கு ஒரு முறை
(D) ஆறு மாதத்திற்கு ஒரு முறை

19. The Financial and administrative control over the depots of Khadi and Village Industries is exercised by

(A) Manager of the Depot

(B) Assistant Director and Khadi and Village Industries

(C) Deputy Director of Khadi and Village Industries

(D) Centre Khadi Office

காதி துறைகளின் மீது நிதி மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகளை நிர்வகிக்கும் அலுவலர்

(A) துறை மேலாளர்

(B) உதவி இயக்குநர், கதர் கிராமியத் தொழில்கள்

(C) துணை இயக்குநர், கதர் கிராமியத் தொழில்கள்

(D) மைய கதர் அலுவலகர்

20. Under the P.T.M.G.R Noon meal scheme in I.C.D.S. the Variety Rice was Introduced on

(A) 01.04.2012 (B) 25.03.2016

(C) 01.04.2013 (D) 25.03.2013

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் கலவைச் சாதம் அறிமுகமான நாள்

(A) 01.04.2012 (B) 25.03.2016

(C) 01.04.2013 (D) 25.03.2013

21. The average Annual Income of a Municipality exceeding rupees 10 crores is classified as

(A) First Grade (B) Second Grade

(C) Selection Grade (D) Special Grade

பத்து கோடிக்கு மேல் சராசரி ஆண்டு வருமானம் உள்ள நகராட்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ள நிலை

(A) முதல் நிலை (B) இரண்டாம் நிலை

(C) தேர்வு நிலை (D) சிறப்பு நிலை

22. Educational Qualification of a Cook in the P.T.M.G.R. Noon Meal Scheme belongs to scheduled tribe is

(A) 8th Std Pass (B) 5th Std Pass

(C) 5th Std Fail (D) Should know to read and write

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சமையலராக பணியாற்ற பழங்குடியினருக்கு தேவையான கல்வித் தகுதி

(A) 8ம் வகுப்பு தேர்ச்சி (B) 5ம் வகுப்பு தேர்ச்சி

(C) 5ம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர் (D) எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்

23. Town Panchayat Building Rules come into force from

(A) August 1947 (B) October 1920

(C) October 1970 (D) November 1977

பேரூராட்சிகளுக்கான கட்டிட விதிகள் அமலுக்கு வந்த நாள்

(A) ஆகஸ்ட் 1947 (B) அக்டோபர் 1920

(C) அக்டோபர் 1970 (D) நவம்பர் 1977

24. The responsibility of Bill Collector in a Town Panchayat for lossed caused due to time barred taxes and fees is

(A) 50% (B) 30%

(C) 5% (D) 10%

பேரூராட்சியில் காலங்கடந்த வரிகள் மற்றும் கட்டண நிலுவைகளில் ஏற்படும் இழப்பிற்கு வரித் தண்டலரின் பொறுப்பு

(A) 50% (B) 30%

(C) 5% (D) 10%

25. Can a Townpanchayat levy profession tax to a State bank of India Branch situated within its area?

(A) Levy 50% (B) Can Levy 25%

(C) Can Levy 100 % (D) Cannot Levy

பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பாரத ஸ்டேட் வங்கி கிளைக்கு பேரூராட்சி தொழில் வரி விதிக்க முடியுமா?

(A) 50% விதிக்கலாம் (B) 25% விதிக்கலாம்

(C) 100% விதிக்கலாம் (D) வரி விதிக்க இயலாது

26. If a Bill Collector in a townpanchayat collects 100 % in current demand including arrear demand he is eligible to get a bonus of

(A) 1/2 Month Pay (B) 2 Month Pay

(C) One Month Pay (D) 3/4 Month Pay

பேரூராட்சியில் நடப்பு கேட்பு மற்றும் நிலுவை கேட்பு உட்பட 100% வசூலித்த வரித் தண்டலர் எவ்வளவு போனஸாக பெறும் தகுதியுடையவராவார்.

(A) 1/2 மாத ஊதியம் (B) 2 மாத ஊதியம்

(C) ஒரு மாத ஊதியம் (D) 3/4 மாத ஊதியம்

27. In a Townpanchayat the Uniform and Chappals may be supplied ———— Days prior to Deepavali Festival.

(A) 30 Days (B) 15 Days

(C) 10 Days (D) 45 Days

பேரூராட்சியில் சீருடைகள் மற்றும் காலணிகள் தீபாவளி விழாவிற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக வழங்கலாம்?

(A) 30 நாட்கள் (B) 15 நாட்கள்

(C) 10 நாட்கள் (D) 45 நாட்கள்

28. Age of Retirement for Superior Service in Townpanchayat is

(A) 60 Years (B) 62 Years

(C) 58 Years (D) 68 Years

பேரூராட்சியில் மேல்நிலை பணியாளர்களுக்கான ஓய்வு வயது

(A) 60 ஆண்டுகள் (B) 62 ஆண்டுகள்

(C) 58 ஆண்டுகள் (D) 68 ஆண்டுகள்

29. In respect works audit objections, the Percentage to be recovered from the Executive Officer is

(A) 5% (B) 2 %

(C) 20% (D) 10 %

வேலை தொடர்பான தணிக்கை தடைகளில் இழப்பு தொகைகளில் செயல் அலுவலரிடமிருந்து மீளப் பெறப்படத்தக்க தொகையின் சதவீதம்.

(A) 5% (B) 2%

(C) 20% (D) 10%

30. Contributory Pension Scheme is eligible for those who are newly recruited after

(A) 01.04.2004 (B) 01.04.2005

(C) 01.04.2003 (D) 01.04.2006

எந்த தேதிக்கு பின்னர் புதிதாக தேர்வு செய்யப்பட்ட பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கு தகுதியானவராவர்

(A) 01.04.2004 (B) 01.04.2005

(C) 01.04.2003 (D) 01.04.2006

31. The Services of all Panchayat Union Staff have been made Pensions able with effect from

(A) 31.03.1974 (B) 01.04.1975

(C) 30.09.1970 (D) 01.04.1974

ஊராட்சி ஒன்றிய பணியாளரின் பணிக்காலம் ஓய்வூதியம் பெறத் தகுதியானதென தெரிவிக்கப்பட்ட நாள்

(A) 31.03.1974 (B) 01.04.1975

(C) 30.09.1970 (D) 01.04.1974

32. The appointment of Gang mazdoors in Panchayat Union has been banned by government from

(A) 01.04.1979 (B) 01.04.1980

(C) 01.04.1989 (D) 01.04.1990

ஊராட்சி ஒன்றியங்களில் கேங் மஸ்தூர்கள் நியமனம் தடைசெய்யப்பட்ட நாள்

(A) 01.04.1979 (B) 01.04.1980

(C) 01.04.1989 (D) 01.04.1990

33. In a Panchayat Union Magisterial Fines are classifies under

(A) Revenue from own sources (B) Assigned Revenue

(C) Grants of the court (D) Grants of Central Government

நீதிமன்ற அபராதக் கட்டணம் ஊராட்சி ஒன்றிய வருவாயில் எந்த வகைப்பாட்டை சார்ந்தது

(A) சொந்த வருவாய் (B) ஒப்பளிக்கப்பட்ட வருவாய்

(C) நீதிமன்ற மானியம் (D) மத்திய அரசு மானியம்

34. In a Panchayat Union Education Fund is Operated in account number

(A) I (B) II

(C) III (D) V

ஊராட்சி ஒன்றியத்தில் கல்வி நிதி பராமரிக்கப்படும் கணக்கு எண்

(A) I (B) II

(C) III (D) V

35. Leave Travel Concession has been extended to the provincialised staff of Panchayat Union from

(A) 01.01.1991 (B) 01.01.1992

(C) 22.01.1991 (D) 01.04.1991

விடுப்பு கால பயணச் சலுகை ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கு விரிவுபடுத்தப்பட்ட நாள்

(A) 01.01.1991 (B) 01.01.1992

(C) 22.01.1991 (D) 01.04.1991

36. The Chairman of the Committee for purchase water supply materials and maintenance of power pumps for the Panchayat Union is

(A) Executive Engineer TWAD Board

(B) Project Officer

(C) P.A. to District Collector

(D) District Collector

ஊராட்சி ஒன்றியங்களுக்கு குடிநீர் உபகரணங்கள் மற்றும் மின்விசை இறைப்பான் உபரகணங்கள் கொள்முதல் செய்யும் குழுவின் தலைவர்

(A) குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர்

(B) திட்ட அலுவலர்

(C) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்

(D) மாவட்ட ஆட்சியர்

37. The Monthly admissible residential Telephone charges of the BDO is

(A) Rs. 500 (B) Rs. 1000

(C) Rs. 350 (D) Not Admissible

அனுமதிக்கக் கூடிய வட்டார வளர்ச்சி அலுவரின் மாதாந்திர இல்லத் தொலை பேசிக்கட்டணச் செலவினம்

(A) ரூ. 500 (B) ரூ. 1000

(C) ரூ. 350 (D) அனுமதிக்க கூடியதல்ல

38. The Security Deposit amount collected from a contractor in a Municipality is

(A) 1% (B) 5%

(C) 3% (D) 2%

நகராட்சியில் ஒப்பந்ததாரரிடமிருந்து பெறப்பட வேண்டிய காப்பு வைப்புத் தொகை

(A) 1% (B) 5%

(C) 3% (D) 2%

39. The Registration Fee of a Class V contractor in a Municipality is

(A) Rs. 5000 (B) Rs. 4000

(C) Rs. 2000 (D) Rs. 1000

நகராட்சியில் வகுப்பு V ஒப்பந்ததாரருக்கான பதிவுக்கட்டணம்

(A) ரூ. 5000 (B) ரூ. 4000

(C) ரூ. 2000 (D) ரூ. 1000

40. The rate of penalty for the failure on the part of the contractor to employ the technical staff for the value of work above 25 lakhs is Rs.

(A) Rs. 1000 (B) Rs. 2000

(C) Rs. 3000 (D) Rs. 4000

ரூபாய் 25 லட்சத்திற்கு மேல் ஒப்பந்த மதிப்புடைய வேலையில் தொழில் நுட்ப பணியாளரை அமர்த்த தவறிய ஒப்பந்ததாரருக்குரிய தண்டத் தொகை

(A) ரூ. 1000 (B) ரூ. 2000

(C) ரூ. 3000 (D) ரூ. 4000

41. Regarding Road works the Security Deposit shall be refundable only after the maintenance period of

(A) 12 Months (B) 6 Months

(C) 3 Months (D) 1 Month

சாலை வேலைகள் முடிவுற்ற பின் காப்பு வைப்புத் தொகையினை மீளப் பெறுவதற்கான பராமரிப்பு காலம்

(A) 12 மாதங்கள் (B) 6 மாதங்கள்

(C) 3 மாதங்கள் (D) 1 மாதம்

42. The Block Level Agro Engineering and Co-op centres and district level Co-Op Agro Service-Societies may be exempted from payment of

(A) EMD

(B) EMD and Security Deposit

(C) Security Deposit

(D) Additional Security Deposit

வட்டார வேளாண் பொறியியல் கூட்டுறவு மையங்கள் மற்றும் மாவட்ட கூட்டுறவு வேளாண் பணிகள் சங்கங்கள் எந்த தொகை செலுத்துவதிலிருந்து விதி விலக்கு பெற்றது

(A) பிணை வைப்புத் தொகை

(B) பிணை வைப்புத் தொகை மற்றும் காப்பு வைப்புத் தொகை

(C) காப்பு வைப்புத் தொகை

(D) கூடுதல் காப்பு வைப்புத் தொகை

43. Plan Account - Part II is maintained in

(A) Madurai Corporation

(B) Town Panchayat

(C) Chennai Corporation

(D) University of Madras

திட்டக் கணக்குகள் - பகுதி II பராமரிக்கப்படும் நிறுவனம்

(A) மதுரை மாநகராட்சி

(B) பேரூராட்சிகள்

(C) சென்னை மாநகராட்சி

(D) சென்னை பல்கலைக் கழகம்

44. The Government order for Payment of interest to the belated payment of gratuity came into force from

(A) 01.04.2000

(B) 01.04.2001

(C) 01.04.2002

(D) 01.04.2004

தாமதமாக வழங்கப்படும் பணிக்கொடைக்கு வட்டி வழங்கும் அரசாணை அமலில் வந்த நாள்

(A) 01.04.2000

(B) 01.04.2001

(C) 01.04.2002

(D) 01.04.2004

45. Minimum age for the entry into government service is

(A) 21 Years (B) 31 Years

(C) 28 Years (D) 18 Years

அரசு பணிக்கான குறைந்தபட்ச வயது

(A) 21 ஆண்டுகள் (B) 31 ஆண்டுகள்

(C) 28 ஆண்டுகள் (D) 18 ஆண்டுகள்

46. For appointment in compassionate grounds, the minimum age should be

(A) 12 Years (B) 16 Years

(C) 18 Years (D) 20 Years

கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு, குறைந்தபட்ச வயது

(A) 12 ஆண்டுகள் (B) 16 ஆண்டுகள்

(C) 18 ஆண்டுகள் (D) 20 ஆண்டுகள்

47. The competent authority to sanction deputation on foreign service to C and D Government Servants (within the state) under rule 110 (b) (i) of FR is

(A) Government

(B) Heads of Department

(C) Heads of office

(D) Regional Heads

அடிப்படை விதிகள் 110(b) (i) -ன் படி சி மற்றும் டி அரசு ஊழியர்களுக்கு அயற்பணியினை (மாநிலத்திற்குள்) அங்கீகரிக்கும் தகுதி வாய்ந்த அலுவலர்

(A) அரசு

(B) துறைத் தலைவர்

(C) அலுவலக தலைவர்

(D) மண்டல தலைவர்கள்

48. If the officer is deputed any training / course while they are working on deputation on foreign service the cost shall be borne by the

(A) Parent Department (B) Government

(C) Employer (D) Foreign employer

அயற்பணியிலிருந்து பணியாளர் ஏதாவது பயிற்சிக்காகவோ / படிப்பிற்காகவோ அனுப்பப்பட்டால் அதற்கான செலவினத்தை ஏற்பது

(A) தாய்த் துறை (B) அரசு

(C) பணியாளர் (D) அயற்பணியின்துறை

49. Implementation of Pradhan Mantri Jan Dhan Yojana in Tamilnadu is on

(A) 15th June 2014 (B) 28th August 2014

(C) 31st December 2015 (D) 28th August 2015

பிரதம மந்திரி ஜன் தன் யோஜனா திட்டம் தமிழ்நாட்டில் எப்போது அமல்படுத்தப்பட்டது

(A) 15 ஜூன் 2014 (B) 28 ஆகஸ்ட் 2014

(C) 31 டிசம்பர் 2015 (D) 28 ஆகஸ்ட் 2015

50. The pension disbursing officer for the Panchayat Union Pensioners is

(A) The Commission of the Panchayat Union

(B) Director of Rural Development

(C) Director of Local fund Audit

(D) The District Collector

ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்

(A) ஊராட்சி ஒன்றிய ஆணையர்

(B) ஊரக வளர்ச்சி இயக்குநர்

(C) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர்

(D) மாவட்ட ஆட்சியர்

51. The sanctioning authority for grant under Panchayat Union Pensioners Health Fund Scheme

(A) District Collector

(B) Director of Local Fund Audit

(C) Director of Pension

(D) Director of Rural Development

ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியர் மருத்துவ நலநிதி திட்ட மானிய அனுமதி அலுவலர்

(A) மாவட்ட ஆட்சியர்

(B) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர்

(C) ஓய்வூதிய இயக்குநர்

(D) ஊரக வளர்ச்சி இயக்குநர்

52. Tamilnadu Local Fund Audit Act 2014 received the assent of the governor on

(A) 01.04.2014 (B) 31.03.2014

(C) 14.12.2014 (D) 01.01.2014

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 ஆளுனரின் ஒப்புதல் பெற்ற நாள்

(A) 01.04.2014 (B) 31.03.2014

(C) 14.12.2014 (D) 01.01.2014

53. The chairman of State High Level Committee for the Town Panchayat is

(A) Commissioner of Municipal Administration

(B) Director of Townpanchayat

(C) Director of Local Fund Audit

(D) Director of Rural Development

பேரூராட்சிகளுக்கான மாநில உயர் மட்டக்குழுவின் தலைவர்

(A) நகராட்சி நிர்வாக ஆணையர்

(B) பேரூராட்சியின் இயக்குநர்

(C) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர்

(D) ஊரக வளர்ச்சி இயக்குநர்

54. Service Charges to Railway Properties where full benefit is derived

(A) 1/4 of the Tax (B) 1/3 of the Tax

(C) 1/2 of the Tax (D) Full Tax

ரயில்வே சொத்துக்களிலிருந்து முழு பலன் பெறுமிடத்து சேவைக் கட்டணமாக ரயில்வேயிடமிருந்து பெறப்பட வேண்டியது

(A) 1/4 பங்கு வரி (B) 1/3 பங்கு வரி

(C) 1/2 பங்கு வரி (D) முழு பங்கு வரி

55. Bunks and Stalls of Private Parties on Railway Properties are

(A) Assessable for Property Tax in Full

(B) Not Assessable for Property Tax

(C) Assessable for Property Tax at 50%

(D) Assessable for Property Tax at 75 %

ரயில்வே சொத்தில் உள்ள தனியார் கடைகளுக்கு சொத்துவரி

(A) முழு சொத்து வரி விதிக்கலாம்

(B) சொத்து வரி விதிக்க இயலாது

(C) சொத்துவரியில் 50% விதிக்கலாம்

(D) சொத்துவரியில் 75% விதிக்கலாம்

56. The person / Body held responsible for the confirmation of reauction in a municipality is

(A) Chairman (B) Commissioner

(C) The Council (D) The Revenue Officer

நகராட்சியில் மறு ஏலத்தை உறுதி செய்வதற்கு பொறுப்பான நபர் / குழு

(A) மன்றத் தலைவர் (B) ஆணையர்

(C) மன்றம் (D) வருவாய் அலுவலர்

57. In Municipality water supplied to a railway station platform should be treated as for

(A) Domestic Purpose

(B) Non Domestic Purpose

(C) Industrial Purpose

(D) Commercial Purpose

நகராட்சியால் ரயில்வே ஸ்டேசன் பிளாட் பாரத்திற்கு குடிநீர் வழங்கும் நிலை கருதப்படும் உபயோகம்

(A) பொது உபயோகம்

(B) பொது உபயோகமல்லாதது

(C) தொழிற்சாலை உபயோகம்

(D) வர்த்தக உபயோகம்

58. Refreshment charges for commissioner chairman and for the meeting of the council is

(A) An Expenditure that require prior sanction of the council

(B) Un authorised expenditure

(C) Authorised expenditure

(D) An expenditure that does not require prior sanction of the council

ஆணையர், நகர் மன்றத் தலைவர் மற்றும் நகர் மன்றக் கூட்டத்திற்கான சிறு செலவினம் என்பது

(A) மன்றத்தின் முன் அனுமதி பெற்று செய்யவேண்டிய செலவினம்

(B) அனுமதியற்ற செலவினம்

(C) அனுமதிக்ககூடிய செலவினம்

(D) மன்ற முன் அனுமதி பெறாமல் செய்ய வேண்டிய செலவினம்

59. In a Municipality Refund of lapsed deposits require prior sanction of the

(A) Chairman

(B) Council

(C) District Collector

(D) Regional Deputy Director of Municipalities

நகராட்சியில் காலங்கடந்த வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படுவதற்கு எவரின் முன் அனுமதி தேவை

(A) மன்றத் தலைவர்

(B) மன்றம்

(C) மாவட்ட ஆட்சியர்

(D) நகராட்சிகள் மண்டல இயக்குநர்

60. Award of cash incentives to the government servants who have rendered service of

(A) 30 years (B) 33 years

(C) 25 years (D) 35 years

மாசற்ற பணிபுரிந்து ஊக்கத் தொகை பெறுவதற்கு தகுதியான ஆண்டுகள்

(A) 30 ஆண்டுகள் (B) 33 ஆண்டுகள்

(C) 25 ஆண்டுகள் (D) 35 ஆண்டுகள்

TC-153

009/DM/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR LOCAL FUND AUDIT AND INTERNAL AUDIT DEPARTMENTS

(With Books)

Maximum Time : 1 hour Maximum Marks : 40

***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.
விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).
விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Write the answer for any EIGHT of the following questions.**
**கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் எட்டு கேள்விகளுக்கு மட்டும் பதில் அளிக்கவும்.**

**(8 × 5 = 40)**

1. Calculate Property Tax for a tiled building in commercial basis in a Municipality.

| | |
|---|---|
| Area of the building | 1500 sqft |
| Zone | A (value Rs. 2 per sqft) |
| Age | 3 years |
| Percentage of tax | Property tax 20% / Year |
| | Education Tax 6% / Year |
| Value of Land | 1/6 |

[Turn over

ஒரு நகராட்சியில் கீழே குறிப்பிடப்பட்ட விபரங்களின் அடிப்படையில் வணிக நோக்கமுடைய கட்டிடத்திற்கு சொத்து வரி நிர்ணயம் செய்யவும்

| | |
|---|---|
| கட்டிடத்தின் மொத்த பரப்பளவு | 1500 சதுரடி |
| மண்டலத்தின் மாதாந்திர வாடகை மதிப்பு | A (ஒரு சதுர அடி ரூ. 2) |
| வயது | 3 ஆண்டுகள் |
| வரி விகிதம் | சொத்துவரி 20% / ஆண்டுக்கு<br>கல்வி வரி 6% / ஆண்டுக்கு |
| கட்டிடத்தின் மொத்த மதிப்பு | 1/6 |

2. What are the functions of the Directorate of Local Fund Audit other than audit?

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குனரகத்தின் தணிக்கை தவிர்த்த பணிகள் யாவை?

3. Define the classification of contractors according to normal financial capacity for registration as a contractor in a municipality.

நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய அவர்களின் நிதித் தகுதியின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ள வகைப்பாடுகளை விளக்குக.

4. What are the major items of expenditure that townpanchayats can incur from their own funds?

பேரூராட்சிகள் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளக் கூடிய முக்கிய செலவினங்கள் யாவை?

5. What are the checks to be exercised in auditing the cheque received register in a municipality?

நகராட்சியில் காசோலை வரவினப் பதிவேட்டை தணிக்கை செய்கையில் சரிபார்க்க வேண்டிய இனங்கள் யாவை?

6. What are the rates of audit fees of the following institutions?

(a) Agri Depot

(b) Private Engineering College and Poly techniques

(c) Tamilnadu Housing Board

(d) Tamilnadu Slum Clearance Board

(e) Legal Aid Advisory Board.

கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கான தணிக்கை கட்டண விகிதங்களை கூறுக.

(அ) விவசாய துறை

(ஆ) தனியார் பொறியியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்குகள்

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

(ஈ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

(உ) சட்ட உதவி ஆலோசனை மையம்.

7. Explain the qualifications necessary for the appointment of a Noon Meal Organiser in the school.

பள்ளி சத்துணவு திட்ட அமைப்பாளர் நியமனத்திற்கு தேவையான தகுதிகளைக் கூறுக.

8. Define the main features of Tamilnadu Weights and Measures (enforcement) Act 1958?

தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் 1958-ன் முக்கிய அம்சங்கள் யாவை?

9. Calculate Family Welfare Grant (2/3 Grant) in a Corporation for the year 2017-2018 with details given below.

| | |
|---|---|
| Pay | 60,00,000 |
| Dearness allowance | 40,00,000 |
| House rent allowance | 2,54,000 |
| Medical allowance | 30,000 |
| Washing allowance | 11,000 |
| Pay incentive | 65,000 |
| E.B. Charges | 10,500 |
| Cost of Medicine | 2,00,000 |
| Medical equipments | 6,00,000 |
| Family Welfare Grant | 2/3 |

பின்வரும் விபரங்களை கொண்டு 2017-2018 -ம் ஆண்டிற்கு ஒரு மாநகராட்சியின் குடும்ப நல மானியம் (2/3 மானியம்) கணக்கிடுக.

| | |
|---|---|
| ஊதியம் | 60,00,000 |
| அகவிலைப்படி | 40,00,000 |
| வீட்டு வாடகைப்படி | 2,54,000 |
| மருத்துவப்படி | 30,000 |
| சலவைப்படி | 11,000 |
| ஊக்க ஊதியம் | 65,000 |
| மின் கட்டணம் | 10,500 |
| மருந்துகள் செலவு | 2,00,000 |
| மருத்துவ உபகரணங்கள் | 6,00,000 |
| குடும்ப நல மான்யம் | 2/3 |

10. What are the important State Government Grants received in a Panchayat Union?

ஊராட்சி ஒன்றியத்தால் பெறப்படும் முக்கியமான மாநில அரசின் மானிங்கள் யாவை?